**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.138/2013**

**Date: 26.02.2024.**

PW–2: ஜெயந்தி

சாட்சி இன்று மீண்டும் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் 1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**A1 to A3, A5, A6, A9, A11, A13, A14 & A16 to A18 present. A7, A8 & 15 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed.**

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வங்குடி கிராமத்தில் மேலத்தெருவில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தேசிங்குபாலன் இறந்ததிற்கு பிறகிலிருந்து எங்களது கிராமத்தில் பாதுகாப்பு பணிக்காக தினசரி 20 போலிசார் தொடர்ந்து பணியில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவத்திற்கு பிறகிலிருந்து தான் போலிசார் பாதுகாப்பு பணியில் இருக்கிறார்கள்.

சம்பவத்தினத்தன்று காலை 9.00 மணிக்கு போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. பிற்பகல் 12.00 மணிக்கு தான் வந்தார்கள். ராஜலிங்கமும், அமிர்தலிங்கமும் பிற்பகல் 1.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் வீட்டில் தான் இருந்தார்கள். சம்பவ சமயத்தில் அமிர்தலிங்கம் பாண்டிசேரியில் டெக்ஸ்டைல் கடைக்கு வேலைக்கு சென்றுவந்துகொண்டிருந்தார் என்றால் சரியல்ல. மகாலிங்கம், பிரபு, சுரேஷ் ஆகியோர்களுக்கு சொந்தமான அலைபேசிகள் சம்பவ இடங்களில் உடைந்து கிடந்ததை போலிசார் எத்தனை மணிக்கு எடுத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு நினைவில்லை.

மகாலிங்கம், சுரேஷ், பிரபு, தர்மலிங்கம் ஆகியோர்களது செருப்புகள் சம்பவஇடத்தில் கிடந்தது என்றால் சரிதான். அந்த செருப்புகளை போலிசார் எத்தனை மணிக்கு எடுத்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. பிரேத பரிசோதனை முடிந்து இறந்த நபர்களின் உடல்களானது கிராமத்திற்கு அன்று இரவு 8.00 மணிக்கு கொண்டு

வரப்பட்டது. அந்த உடல்கள் மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக பிற்பகல் 2.00 மணிக்கு கொண்டு செல்லப்பட்டது. நான் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என்னுடன் ஜெயா, பவுனம்மாள் ஆகியோர் மருத்துவமனைக்கு வந்தார்கள். நான் மேற்படி மருத்துவமனைக்கு சென்ற போது பிற்பகல் 2.00 மணி முதல் 2.30 மணி இருக்கும்.

எனது கணவரின் பிரேதமானது மருத்துவமனையில் வைத்து என்னிடம் இரவு 8.00 மணிக்கு ஒப்படைக்கப்பட்டது. என் கணவர் உடலுடன் நான் வங்குடிக்கு திரும்பி விட்டேன் என்றால் சரிதான். நான் அன்று மாலை 6.00 மணிக்கு கிராமத்திற்கு வந்துவிட்டேன். என் கணவரின் உடல் இரவு 8.00 மணிக்கு கிராமத்திற்கு கொண்டுவரப்பட்டது. நான் வழக்கமாக கூலி வேலைக்கு செல்வேன் என்றால் சரிதான்.

நான் எனது கிராமத்திற்குள்ளேயே இருக்ககூடிய விவசாய நிலங்களுக்கு தான் வேலைக்கு போவேன். நான் காலை எத்தனை மணிக்கு வேலைக்கு புறப்பட்டு செல்வேன் என்றால் சம்பவ சமயத்தில் எனக்கு குழந்தை பிறந்திருந்ததால் நான் வேலைக்கு போகவில்லை. நான் அன்று காலையில் இயற்கை உபாதையை கழிப்பதற்காக போயிருந்தேன். அந்த இடமானது சுரேசும், பிரபுவும் வெட்டப்பட்ட இடத்திலிருந்து சுமார் 50 அடி தொலைவில் இருக்கிறது.

பிரபுவின் உடல் கிடந்த இடத்திலிருந்து நான் சொல்லக்கூடிய இடமானது வடக்கு பக்கமாக இருக்கிறது. குழந்தை பிறப்பதற்கு முன்பாக நான் கூலி வேலைக்கு சென்றபோது வழக்கமாக காலை 8.00 மணிக்கு புறப்பட்டு செல்வேன். பிற்பகல் 3.00 மணிக்கு வேலை முடிந்து வருவேன். சம்பவத்தின் போது சத்தம் கேட்டு பிரபு வெட்டப்பட்ட இடத்திற்கு எனது மாமனார், மாமியார், அமிர்தலிங்கம் ஆகியோர் ஓடி சென்றார்கள் என்றால் சரியல்ல. மகாலிங்கம் வெட்டப்பட்ட இடத்திற்கு தான் ஓடிவந்தார்கள்.

மகாலிங்கம் காமராஜ் வீட்டு சந்துபகுதியில் வெட்டப்பட்டு விழுந்து கிடந்தார். அந்த சந்து பகுதியின் வழியாகத்தான் பூராசாமி பெட்டி கடைக்கு போகமுடியும் என்றால் சரியல்ல. நான் பூராசாமி கடையின் அருகே வந்தபோது காலை 10.00 மணி இருக்கும்.

எதிரிகள் ஒளிந்து கொண்டிருந்ததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அவர்கள் பாலுசாமி வீட்டு சந்து பகுதியில் ஒளிந்திருந்தார்கள். அங்கு தான் ஒளிந்திருந்தார்கள். வேறுஎங்கும் ஒளிந்திருக்கவில்லை. எதிரிகள் பாலுசாமிவீட்டு சந்து பகுதியில் ஒளிந்திருந்தார்கள் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். எதிரிகள் திருஞானம், ரவிசந்திரன், சக்திவேல் மகன் ரமேஷ், தினேஷ், திருவாளப்புத்துார் ரமேஷ், காளிதாசன், பிரபாகரன், பழனிசாமி ஆகியோர் உட்பட 16 பேர் ஒளிந்திருந்தார்கள். 16 பேர்களின் பெயர்கள் தெரியுமா என்றால் தெரிந்தவர்களின் பெயர்களை சொல்லியிருக்கிறேன். தெரியாதவர்களின் பெயர்களை சொல்லவில்லை என்றால் அவர்களுக்கு உண்மையில் ஒரு பெயர் இருக்கிறது. கூப்பிடுவது மற்றொரு பெயர் அதனால் சொல்லவில்லை.

போலிசார் என்னை 5, 6 முறை விசாரித்திருப்பார்களா என்றால் சம்பவம் நடந்த அன்றுமட்டும் தான் விசாரித்தார்கள். என் கணவர் இறந்தது சம்மந்தமாக நான் ஒரு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால் சம்பவம் நடந்த அன்று பிற்பகல் 12.00 மணிக்கு போலிசார் வந்து விசாரித்தபோது சொன்னேன். என் கொழுந்தனார் ராஜலிங்கத்திடம் போலிசார் எத்தனை மணிக்கு கையெழுத்து வாங்கினார்கள் என்றால் அவர் தான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார்.

எனது மாமியாரை காப்பாற்ற நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது மாமியாரை யார் யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் ராஜலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோர் சம்பவம் நடந்த அன்று வீட்டில் இருந்ததாகவோ அல்லது குளத்திற்கு சென்று குளித்துவிட்டு வந்தார்கள் என்றோ, அல்லது அவர்கள் ஊரில் இருந்தார்கள் என்றோ நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

சம்பவ சமயத்தில் எனக்கு குழந்தைபேறு ஆகியிருந்ததால் நான் வேலைக்கு போகாமல் வீட்டில் இருந்ததாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

சம்பவ தினத்தன்று ராஜலிங்கம் படிப்பதற்காக சிதம்பரம் போய்விட்டார் என்றாலும், அமிர்தலிங்கம் வேலைக்காக பாண்டிசேரி போய்விட்டார் என்றாலும், நான் கூலி வேலைக்காக பக்கத்து கிராமத்திற்கு போய்விட்டேன் என்றாலும், எனவே நாங்கள் மூவரும் அன்றைய தினம் ஊரில் இல்லை என்றாலும் சரியல்ல. அதனால் தான் நான் போலிசார் என்னை விசாரித்தபோது ராஜலிங்கம் மற்றும் அமிர்தலிங்கம் பற்றி எதுவும் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் பக்கத்து கிராமத்திற்கு வேலைக்கு போய்விட்டு பிற்பகல் 2.00 மணிக்கு தான் சம்பவம் பற்றி கேள்விபட்டு ஊருக்கு வந்தேன் என்றாலும், அதனால் தான் நான் போலிசார் விசாரணையில் நான் வீட்டில் இருந்ததாக சொல்லவில்லை என்றாலும் சரியல்ல.

நான் சம்பவ தினத்தன்று எனது குழந்தைகளை எனது மாமனார், மாமியாரின் பொறுப்பில் விட்டுவிட்டு வேலைக்கு போய்விட்டேன் என்றால் சரியல்ல. எனது வீடு சூறையாடப்பட்டதற்கு பிறகு நான் எந்த வீட்டிற்கு சென்று அடைக்கலம் தேடிக்கொண்டேன் என்றால் நான் வேறு எங்கும் போகவில்லை. சேதப்படுத்தப்பட்ட எனது வீட்டில் தான் இருந்தேன். கூரை வீட்டை தீ வைத்து எரித்துவிட்டார்கள். ஓட்டு வீட்டில் ஓடுகளை உடைத்துவிட்டார்கள். வெறும் சுவர் மட்டும் தான் இருந்தது என்றால் சரிதான். அந்த இரண்டு வீடுகளை தவிர எங்களுக்கு வேறு வீடுகள் கிடையாது என்றால் சரிதான்.

எங்களது ஆழ்துளை கிணற்றை சேதப்படுத்திவிட்டார்கள். 100 ஆடுகள், 100 மாடுகள் ஆகியவற்றை எடுத்து சென்றுவிட்டார்கள். அந்த கால்நடைகளுக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியவில்லை. அது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கொடுத்திருக்கிறார்கள். எனது கொழுந்தனார் ராஜலிங்கம் அன்று வீட்டில் தான் இருந்தார். எத்தனை மணி வரை இருந்தார் என்றால் 10.00 மணி வரை இருந்தார். எதிரிகள் அவர்களை வெட்டுவதற்கு துரத்தியபோது அவர் அங்கிருந்து ஓடிவிட்டார். 10.00 மணி வரை அமிர்தலிங்கமும் வீட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான். அவரும் எதிரிகள் வெட்டுவதற்கு துரத்தியபோது தான் அங்கிருந்து ஓடிவிட்டார். அவர்கள் இருவரும் மேற்கு நோக்கி ஓடிவிட்டார்கள்.

அவர்கள் காளியம்மன் கோவிலை பார்த்து ஓடினார்களா என்றால் மேற்கு பக்கமாக ஓடினார்கள். காளியம்மன் கோவிலை பார்த்து ஓடினார்களா என்று எனக்கு தெரியாது. எங்களது வீட்டிற்கும், காளியம்மன் கோவிலுக்கும் இடையே 10 அடி தொலைவு இருக்கும். எங்களது வீட்டிற்கும், பூராசாமி கடைக்கும் இடையே சுமார் 10 அடி தொலைவு இருக்கும். எங்கள் வீட்டிற்கு முன்பாக பெட்டிகடை எதுவும் இல்லை.

எங்களது வீட்டிலிருந்து எதிரி பழனிசாமியின் வீடு 10 அடி துூரத்தில் பின்புறமாக இருக்கிறது. காலை சுமார் 8.00 மணிக்கு சம்பவம் ஆரம்பித்து விட்டது என்றால் சரியல்ல. சம்பவம் ஆரம்பித்த போது காலை 9.30 மணி இருக்கும். சம்பவமானது 10 நிமிடத்தில் முடிவடைந்துவிட்டது என்றால் சரியல்ல. சம்பவம் முடிந்தபோது காலை 10.00 முதல் 10.30 மணி இருக்கும். ராஜலிங்கமும், அமிர்தலிங்கமும் யாருடைய வீட்டிற்குள்ளும் சென்று ஒளிந்துகொள்ளவில்லை.

நான் எனது முதல்விசாரணையில் போலிசார் என்னை விசாரித்தபோது ஆயுதங்களை காட்டி விசாரித்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் சம்பவத்தின்போது நான் இயற்கை உபாதையை கழிப்பதற்காக போயிருந்தேன் என்று சொல்லியிருப்பேன் தற்போது சரியாக நினைவில்லை. எதிரி காளிதாசன் எனது கணவரின் மார்பில் ஏறி உட்கார்ந்துகொண்டார் என்று போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

சம்பவத்தின்போது எனது மாமனார் எதிரிகளை பார்த்து எனது மகன்களில் யாரையாவது ஒருவரையாவது உயிருடன் விட்டுவிடுங்கள் என்று சொல்லி கைஎடுத்து கூம்பிட்டார் என்று போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். ராஜலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோர் பரோலில் எப்போது கடைசியாக எங்கள் வீட்டிற்கு வந்தார்கள் என்றால் சென்ற பொங்கலுக்கு வந்தார்கள். அவர்கள் 3 , 4 நாட்கள் தங்கியிருந்தார்கள். அப்போது அவர்கள் இருவரும் நீதிமன்றத்தில் எப்படி சாட்சி சொல்லவேண்டும் என்று எனக்கு சொல்லி கொடுத்தார்களா என்றால் இல்லை.

இப்போதிலிருந்து சுமார் 2 மாதங்களுக்கு முன்பாக போலிசார் வி.ஏ.ஓ மற்றும் அவரது உதவியாளரை அழைத்து வந்து சம்பவ இடங்களை காண்பித்தார்களா என்றால் காண்பித்தார்கள்.

போலிசார் என் மாமியாரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தேசிங்குபாலன் கொலை வழக்கு சம்மந்தமாக எதிரிகளில் சிலர் எனது கணவர் மற்றும் கொழுந்தனார்களுக்கு எதிராக சாட்சி சொன்னார்களா என்று எனக்கு தெரியாது.

வழக்கு சம்பவம் எதனையும் நான் பார்க்கவில்லை என்றாலும், அன்று நான் ஊரிலேயே இல்லை என்றாலும், தேசிங்குபாலன் கொலை வழக்கு சம்மந்தமாக எதிரிகள் சிலர் எனது கொழுந்தனார்களுக்கு எதிராக சாட்சியம் சொன்ன காரணத்தினால் நான் எதிரிகள் மீது விரோதம் கொண்டு அவர்களுக்கு எதிராக பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. மச்சகேந்திரன் மனைவி பெயர் கைகேயி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

கைகேயி இந்த வழக்கில் ஒரு சாட்சி என்றால் இருக்கலாம். நான் எனது முதல்விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும், போலிசார் சொல்லி கொடுத்து பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.